# செந்தில் குறவஞ்சி

# Senthil Kuravanchi

***முனைவர் அ. விவேகானந்தன்***
உதவிப்பேராசியர், தமிழ்த்துறை
அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம்

**Dr. A. Vivekanandan**
*Assistant Professor, Department of Tami*
*Government Arts College (Autonomous)*
*Kumbakonam*

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழ்க்கடவுள் முருகன் மீது காதல் கொண்ட மோகினிப் பெண்ணின் கதையைக் கற்றாரும் கல்லாரும் கேட்டுப் பொருளும் இசையும் எளிமையாகத் தெரியும்படி குறவஞ்சி இலக்கியமாக அமைந்துள்ளது. திருசீரலை வாய்க்கரையில் எழுந்தருளியிருக்கும் திருமுருகன் பெருமைகளைச் "செந்தில் குறவஞ்சி' எனும் தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது. இதன் வழி செந்தில் குறவஞ்சி' நூலை ஆராய்வதே இக்கட்டுரை.*

*இந்நூல் விநாயகன், சிவன், திருமால் வணக்கம் தொடங்கி, வேலவரின் தசாங்கச் சிறப்பை விளக்கிக் கூறுதல், விராலிமலை வேலனின் வளமை, மோகினி வேலவர் திருக்கோலம் கண்டு மயங்குதல், குறி பார்த்தல், திருச்செந்தூர் கோவிலில் தேவதாசி முறை, மோகினி தன் உயிர்த் தலைவனான வேலவனை அடைவது, நற்சகுனங்களைக் கூறுவது, திருச்செந்திலம்பதியை மையமாகக் கொண்டு எழுந்த "செந்தில் குறவஞ்சி' திரிகூடராசப்பக் கவிராயரால் புனையப் பெற்ற திருகுற்றாலக் குறவஞ்சிக்கு ஈடாக சிறந்து காணப்படுகிறது. மலைவளம், வாசல்வளம், கை பார்த்துச் சொல்லுதல், முருகன் செயலுரைத்தல் என 32 பாடல்கள் சுருங்க இடம் பெற்றுள்ளன.*

*தமிழ்முருகன் இலக்கியங்கள் ஒருங்கே தொகுக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டால் அரிதானபல இலக்கியநூல்கள் பெறமுடியும். இக்கட்டுரையின் வாயிலாக செந்தில் குறவஞ்சியும், விராலிமலை வேலவர் குறவஞ்சியும் முழுமையாக கிடைத்தாலும் அரியவகை நூலாகவே கருதவேண்டியுள்ளது.*

## Abstract

*Kuravanji is written in literature so that the story of Mohini, who fell in love with the Tamil god Murugan, is easily understood by Kathtar and Kallar. Tirumurugan's glories in Thirusirala Vaikarai have been published as a book titled 'Sendhil Kuravanchi'. This article is to examine the book "Senthil Kuravanji".*

*This book begins with the salutation of Vinayakan, Shiva and Thirumal, explaining the merits of Velavar Dasanka, the prosperity of Viralimalai Vela, Mohini's enchantment at the sight of Velavar Thirukolam, seeing the mark, the Devadasi ritual at Tiruchendur temple, Mohini reaching her life-leader Velavan, giving good omens, 'Sendhil Kuravanchi' which arose centered on Thiruchentilampathi. 'It is best seen as a substitute for the Thirukutalak Kuravanchi, composed by Trikudarasappa Kaviraya. 32 songs such as Malaivalam, Vasalvalam, Kai Bheer Thai, and Murugan Sekatoraithal have been included.*

*If you engage in research to compile Tamilmurugan literature together, you can*

***முக்கியச் சொற்கள்:*** *குறவஞ்சி, விராலிமலை, திருமுருகன்.*

*get many rare literature books. Through this article, Senthil Kuravanji and Viralimalai Velavar Kuravanji have been found in full, but they have to be considered as rare books.*

***Keywords:*** *Kuravanchi, Viralimalai, Tirumurugan's*

**Citation**

Vivekanandhan, A. "Senthil Kuravanchi." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 3, 2024, pp. 77–84.

*தமிழர்களின் வாழ்வியலில் பழந்தமிழர்களுக்கு தொன்மையாக முருகர் இடம் பெற்றுள்ளார். சங்க இலக்கியத்தில் முருகன் கோயிலை, "அணங்குடை முருகன் கோட்டம்" என்று அழைப்பர். தேவாரத்தில் நம் செந்தில் மேயவள்ளி மணாளன்" என்றும், 'குறவிதோள் மணந்த குமாரவேள்" என்ற குறிப்புகளின் மூலம் அறியமுடிகிறது. கௌமாரவழிபாடும், முருகவழிபாட்டுடன் கலந்து "கார்த்திகேயன், கந்தன்" போன்ற பெயர்களும் தோன்றி உள்ளதை அறியமுடியும். முருகனைத் தெய்வீகமாக கந்தரலங்காரம், கந்தர் அந்தாதி, திருப்புகழ் போன்ற பேரின்பப் பாக்களையும் காணமுடிகிறது.*

**குறவஞ்சி தோற்றம்**

*குறவஞ்சி தோற்றத்தினை ஆராயும் போது தொல்காப்பிய பொருளதிகாரத்தில் அகத்திணை ஒழுகலாற்றில் செவிலி நற்றாயின் செயற்பாடுகளைக் கூறும்போது, தலைவியின் புதியநடை முறையைக் கண்டு ஐயமுற்று குறவர்குடியில் தோன்றிய ஒருத்தியின் வாயிலாகத் தலைவியின் நிலையை அறிந்துகொள்ள முயல்கின்றனர். இதனைத் தொல்காப்பியம்,*

***கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்***
***ஒட்டிய திறத்தால் செய்திக்கண்ணும்.***[1]

*என களவியல் பகுதியில் குறிப்பிட்டுள்ளது.*

*சங்கஇலக்கியங்களில் குறமகள் தெய்வ ஆவேசமுற்றவளாகக் காட்டப்படுகிறாள். அவ்வகையில் குறி கூறும் கட்டுவிச்சியை அழைத்துச் செவிலித்தாய் ஒருத்தி குறி கேட்கும்போது,*

***அகவன் மகளே! அகவன் மகளே!***
***மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்***
***அகவன் மகளே! பாடுக பாட்டே***
***இன்னும் பாடுக பாட்டே, அவர்***
***நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே.***[2]

*எனக் குறுந்தொகையில் எடுத்தாளப்பட்டுள்ளது. அவ்வகையில் எழுந்ததே "செந்தில் குறவஞ்சி" எனும் நூலாகும். திருமுருகனின் திருவடிப் பெருமை அறியாதவர்களை அறிவிலிகள் என்று அருணகிரியார் திட்டுவதாகக் கந்தரலங்காரத்தில்,*

***கோழிக் கொடியன் அடிபணியாமல்***
***குவலயத்தே வாழக்கரத மதியிலிகாள்.***[3]

*எனக் குறிப்பிடுகிறது. சூரபதுமனைத் தனது வேற்படையால், இருகூறாக்கி, ஒருகூறாம் சேவலைக் கொடியாகவும், மற்றதை மயிலை வாகனமாகவும் அமைத்துத் திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ளான்.*

***பார்இரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டு***
***ஒருநாள் சூர்மா தடிந்த சுடர்இலைய வெள்வேல்.***[4]

*என்று சிலப்பதிகாரத்தில் சூரபதுமனை முருகன் கொன்ற திறத்தினை இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். திருமுருகாற்றுப்படையிலும்,*

***பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்***
***சூர்முதறடிந்த சுடரிலை நெடுவேல்.***[5]

*எனவரும் பாடலில் கடலுள் புகுந்து சூர்மாதந்ததனைப் போற்றுவதைக் காணமுடிகிறது. சூரனை வென்றதால் செந்தூரின் பெருமை இலக்கியங்களில் எங்கெங்கும் போற்றப்படுகிறது.*

***சீர்கெழு செந்தில், குன்றக்குரவை.*[6]**
***வெண்டலைப் புணரியலை குஞ்செந்தில்.*[7]**
***திருமணி விளக்கினலைவாய்.*[8]**
***உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீரலைவாய்.*9**

*இத்தகைய பெருமை வாய்ந்த செந்திலம்பதி எனப்படும் திருசீரலை வாய்க்கரையில் எழுந்தருளியிருக்கும் திருமுருகன் பெருமைகளைச் "செந்தில் குறவஞ்சி" எனும் தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது. திரிசுதந்தரப் பெரியவரால் எழுதப்பட்டது. இந்நூல் சென்னை அண்ணாமலை மன்றத்தில் வெளியிடப்பட்டது. திருச்செந்தூரைச் சேர்ந்த சரவணய்யர் நடுநிலைப்பள்ளி மேலாளரிடம் இந்நூல் முழுமையாக இருக்கிறது.*

*திருச்செந்தூர் கோவிலில் தேவதாசி முறை இருந்தகாலத்தில் திருவிழாவின் போது சுவாமியின் முன் செந்தில் குறவஞ்சியைப் பாடியாடி வந்திருக்கின்றனர். திருக்குற்றாலக் குறவஞ்சியைப் பின்பற்றிப் பாடப்பெற்ற இந்நூல் சிரவணபுரம் கௌமாரமடாலயம் கோவையில் நடைபெற்ற "தமிழ்க்கடவுள் முருகன் இலக்கியங்கள்" என்ற ஆய்வுக் கருத்தரங்கில் வெளியாகியுள்ளது.*

*"குறவஞ்சி" இலக்கிய வகைமையில் நாட்டுவளம், மலைவளம், நகர்வளம், கைப்பார்த்துக் குறி சொல்லுதல் ஆகியன இடம்பெறுவது இயல்பாகும். இந்நூலில் இடம்பெறும் "வாசல்வளம்" எனும் பகுதி ஏனைய குறவஞ்சி இலக்கியத்தில் இடம்பெறவில்லை.*

**பாடல் அமைப்பு**

*எளிய இனிய தமிழ்ச்சொற்களாலே ஈரசை முதல் மூன்றசைகளுக்கு மிகாமல் ஒவ்வொருவரியும் இடம்பெற்றுள்ளன.*

***1. மலைவளம் - 10 பாடல்கள்***
***2. வாசல்வளம் - 8 பாடல்கள்***
***3. கைபார்த்தல் - 8 பாடல்கள்***
***4. முருகன்செயலுரைத்தல் - 6 பாடல்கள்***

*என்று நான்கு பகுதிகளாக அமைந்துள்ளன. இதில் "வாசல்வளம்" பகுதியில் சில வரலாற்றுக் குறிப்புகளோடு பாடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலும் நான்கு அடிகளைக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது. திருச்செந்தூர் முருகன் கோவிலின் திருவிழாக்களை ஆய்ந்து முனைவர் பட்டம் பெற்ற ந. கல்யாணசுந்தரம் இக்குறவஞ்சிப் பாடலைச் சேகரித்து அவற்றிற்குப் பொழிப்புரையும் வழங்கியுள்ளார்.*

**மலைவளம்**

***வெள்ளிமலை பொன்னிமலை***
***விரவுரெத்ன மலையும்***
***மிக்கதொரு பழிமலை***
***விரல்சோலை மலையும் (செந்தில் குறவஞ்சி. 1)***
***கிள்ளைமொழி உமைநாளும்***
***வாழ்இமய மடலைபொன்***
***கிளர்சுவாமி மலை பொற்றிரு***
***மலை பொதிகை மலையும் (செந்தில் குறவஞ்சி. 2)***

*எனத் தொடங்கி, பத்தாவது பாடலின் இறுதியில்,*

***"நாட்டில் எங்கள் பெருமைதனைக்***
***கேட்டிலையே அம்மே"***

*என முடித்துள்ளார். திரிகூடராசப்பக்கவிராயர் திருக்குற்றால குறவஞ்சியில் தென்பொதிகை மலைவளம் பாடியதில் ''திரிகூடமலை எங்கள்மலையே' என்று மலையின் பெருமை பேசுவதாக ஒவ்வொரு பாடலடியும் முடிவுறும். ஆனால் செந்தில் குறவஞ்சியில் அவ்வாறு முடியவில்லை.*

*குமரி மாவட்டத்தில் வெள்ளிமலை அல்லது பனிபடர்ந்த கைலாயமலை, மகாமேருமலை, வேலூர்மாவட்டத்திலுள்ளரெத்னகிரிமலை, புகழ்மிக்கபழனிமலை, நீண்டசோலைமலையாகிய அழகர்மலை மற்றும் கிளிபோல் பேசும் உமாதேவி வாழும் இமயமலை, பொன்போல் ஒளிவீசும் சுவாமிமலை, திருக்குற்றாலத்துக்கு அருகிலுள்ள திருமலை, பொதிகைமலை, வள்ளிமலை, புகழோடு விளங்கும் விராலிமலை, கைலைமலை, திருப்பரங்குன்றம் ஆகிய மலைகள் எங்கள் வசமுள்ளவை. அழகிய கந்தமாதனமலை சூரியனின் பெரிய தேரின் சக்கரத்தின் போக்கையே தடுக்கவல்லது என்று உயர்வுநவிற்சியாகப் பாடியுள்ளார்.*

***தேனருவி திரையெழுப்பி வானின் வழியொழுகும்***
***செங்கதிரோன் தேர்க்காலும் பரிக்காலும் வழுகும்.[10]***

*எனக் குற்றாலக்குறவஞ்சியில் இடம்பெற்றதைப் போன்று இதிலும் இடம்பெற்றுள்ளன.*

*ஐந்தாவது பாடலில் அம்மலையில் வாழும் பெண்குரங்கு குளிர்ச்சி பொருந்திய வட்டவடிவமான சந்திரனை மோதிரம் என்று எடுக்கும். இதேபோல் குற்றாலக்குறவஞ்சியில் யானை சந்திரனைச் சோற்று உருண்டை எனக்கருதி வழிமறிப்பதற்கு ஒப்பாகப் பாடியுள்ளார்.*

***வானரங்கள் கனிகொடுத்து மந்திகளோடு கொஞ்சும்***
***மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்.[11]***

*என்ற வரிக்கு இணையாக,*

***"கனிதந்த வெறிகொண்டு***
***கடுவணச்சென் றடிக்கும்***
***தாதுசெறி மலர்க்குழலி***
***எங்கள்மலை மருங்கு" (செந்தில் குறவஞ்சி. 7)***

*என்று மகரந்தம் செறிந்த மலரைக் குழலில் சூடிய பார்வதிதேவி தந்தமலை மைந்தன் முருகன் உறையும் கந்தமலை என்கிறார். ''இமயமலையைப் பார்வதிதேவிக்குச் சீதனமாய் கொடுத்தோம்'' என்கிறாள்குறத்தி. மேலும், அகத்தியமுனிவர்வாழ்வதற்குப் பொதியமலையைக் கொடுத்தோம். இவ்வாறு எம்மை வாரிவழங்குவோம். எங்கள் பெருமையைக் கேட்டதில்லையோ? என வினவுகிறாள் குறத்தி.*

**வாசல் வளம்**

*திருச்செந்தூருக்கு, ''திருச்சீரலைவாய்'' என்ற பெயருமுண்டு. இத்தகைய பெருமைமிகு அலைவாய்க் கரையை, ''வாசல்வளம்'' முழுவதும் எட்டுபாடல்களில் பாடியுள்ளார்.*

***"சீர்மருவும் வாசலிது அம்மே***
***சீரலைவாய் வாசலிது***
***பார்புகழும் வாசலிது செந்தில்***
***பதிதழைத்தோன் வாசலிது" (செந்தில் குறவஞ்சி. 1)***

*என வாசல்வளம் தொடங்குவதாக அமைந்துள்ளது.*

**வரலாற்றுக் குறிப்பு**

*திருச்செந்தூரில் எட்டுக்குடிக்காரி, உதயமுறைக்காரி என்ற இருபிரிவினராகத் தேவதாசிகள் பணிபுரிந்தனர். அக்காலத்தில் சிவாச்சாரியார்கள் வீரபாண்டியன் பட்டினமருகிலுள்ள சண்முகபுரத்தில் குடியிருந்துள்ளனர். அவர்களிடமிருந்து பூசைக்குரிய பொருட்களை வாங்கி வந்த உதயமுறைக் காரிசுந்தரியை வரும்வழியில் பாம்பு தீண்டியது. அந்த இடத்திலேயே இறந்துவிடுகிறாள். அவள் இறந்துகிடந்த இடத்தைமயில் வந்துகாட்டியதால் அவ்விடத்தில் இன்றும் மயில்கள் உலாவும் இடமாக இருக்கிறது. மயிலை அனுப்பி இடத்தைத் தூண்டிக் காட்டியவர் ''தூண்டிவிநாயகர்''. இக்கோயிலில் இவ்வரலாறு கல்வெட்டில் பதிந்துள்ளதை இன்றும் காணமுடிகிறது. அருணகிரியார் ஆறுமுகப்பெருமானைப் பாடிப்பரவி அவர்கையில் கிளியாய் அமர்ந்தார். நக்கீரன் பூசையின் போது கவனம் சிதைந்து பூதத்தின் கையிலகப்பட்டு திருச்செந்தூரில் சிறைப்பட்டார். செந்தில் முருகனைத் திருமுருகாற்றுப் படைப் பாடி சிறைமீண்டார்.*

*உக்கிரகுமாரபாண்டியன் மகள்முனிவர் ஒருவரின் சாபத்தால் குதிரை முகம் வாய்க்கப் பெற்றாள். திருச்செந்தூர் மூலவர் முன்பு கிழக்கே கடலில் குளித்த பின்பு மனிதமுகம் கிடைத்ததாம். அந்தத் தீர்த்தம் அன்று முதல்வதனாரம்ப தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. தமிழில் ''முகாரம்பதீர்த்தம்'' என வழங்குவர். இத்தகைய அருட்செல்வர், குமரகுருபரர், ஆதிசங்கரர், நக்கீரர், அருணகிரிநாதர், பகழிக்கூத்தர் முதலிய அருளாளர்கள் தொழும்வாசல் என்று ''வாசல்வளம்'' பாடி குறவஞ்சியில் போற்றி பாடியுள்ளார்.*

**கை பார்த்தல்**

***கைபார்க்க வாரீரம்மே***
***கைபார்க்க வாரீர்***
***காரிகையே மாதரரே***
***கைபார்க்க வாரீர் . . .   (செந்தில் குறவஞ்சி. 1)***

*எனத் தொடங்குகிறது. முருகன் மீது காதல் கொண்டு வாடிவதங்கும் ஒருபெண்ணுக்குக் குறத்தி கைபார்த்துக் குறி சொல்லும் பகுதியாக 8 பாடல்கள் அமைந்துள்ளன.*

**முருகன் செயலுரைத்தல்**

***''பொன்னாலே பூணூலாம் அம்மே***
***பொன் பொதிந்த தாவடமாம்***
***அன்னநடை வேலவனாம் அம்மே***
***அழகுடனே வாரான்டீ''   (செந்தில் குறவஞ்சி. 1)***

*என வரும் பாடலில் முருகன் அன்னநடை நடந்துவரும் அழகைச் சிறப்பித்துள்ளது. வள்ளி, தெய்வானையை மணந்தவன். அகத்தியனுக்குத் தமிழ் புகட்டியவன் குழந்தை வடிவேலவன். அவனை நீ கண்டதுண்டு. என்னைச் சோதிக்காதே, நான் குறி பார்த்துச் சொன்ன சொல் தப்பியதில்லை. உனக்குக் கவலைவேண்டாம். வெற்றி உண்டாகும்படிச் செய்து அவன் உன்னைக் காப்பான் என்று ஆறு பாடல்கள் குறித்துப் பாடுவதாக அமைந்துள்ளன.*

*இவ்வாறு திருச்செந்திலம்பதியை மையமாகக் கொண்டு எழுந்த ''செந்தில் குறவஞ்சி'' திரிகூடராசப்பக் கவிராயரால் புனையப் பெற்ற திருகுற்றாலக் குறவஞ்சிக்கு ஈடாக சிறந்து காணப்படுகிறது. மலைவளம், வாசல்வளம், கைபார்த்துச்சொல்லுதல், முருகன் செயலுரைத்தல் என 32 பாடல்கள் சுருங்க இடம் பெற்றுள்ளன. மேலும், சென்னை கீழ்த்திசைச் சுவடி*

*நூலகத்திலுள்ள விராலிமலை வேலவர் குறவஞ்சி என்னும் சுவடி பெயர்த்து எழுதப்பட்டு தனிநூலாக 1983 - இல் வெளியிடப்பட்டுள்ளது. இதனை எழுதியவர் பிள்ளைப் பெருமான் கவிராயர் ஆவார். தமிழ்க்கடவுள் முருகன் மீது காதல் கொண்ட மோகினிப் பெண்ணின் கதையைக் கற்றாரும் கல்லாரும் கேட்டுப் பொருளும் இசையும் எளிமையாகத் தெரியும்படி குறவஞ்சி இலக்கியமாக அமைந்துள்ளது.*

*விநாயகன், சிவன், திருமால் வணக்கத்தோடு நூல் தொடங்குகிறது. அடுத்து மங்களம் அமைத்து ஆசிரியர் வேலவரின் தசாங்கச் சிறப்பை விளக்கிக் கூறி குறவஞ்சியைப் பாடுவதாக அமைந்துள்ளது. கட்டியக்காரன் பராக் சொல்லி வர, வேலவர் பவனி முன்பாக மோகனப்பாங்கி வருகிறாள். வாலமோகினி எனும் பெயர் கொண்ட தலை விவிரகதாபம் கூறப்படுகிறது. வேலவர் திருக்கோலம் கண்டு காதலால் உந்தப்பட்டு மயங்கி வருந்துகிறாள். மாலைநேரத்து சந்திரனைக் கண்டு சிந்தையில் தோன்றிய துயரங்களைக் கூறுகிறாள். மாலைத் தென்றலைக் கண்டு துயரம் கொள்கிறாள். வீசும் தென்றலை ஏசுகிறாள். கூவும் குயிலையும் நிந்திக்கிறாள். மன்மதனுடைய முரசாக விளங்கும் அலைக்கடலைக் கண்டு புலம்புகிறாள். பொங்கிய மயலால் கொங்கை இரண்டும் மீறியும் மங்கை மோகினி மன்மதனைத் தூற்றுகிறாள். தன்னருகே கண்ட ஓதிமம், அஞ்சுகம், குயில், வண்டு இவற்றையும் அழைத்துத் தன் நிலைகூறி, தலைவனின் மாலை வாங்கிவர வேண்டுகிறாள். தலைவி தன் துயரைத் தோழியிடம் கூறுகிறாள். தோழி தேற்றுகிறாள்.*

*விராலிமலை வேலனின் வளமையெல்லாம் சொல்லி குறத்தியை தோழி அறிமுகப்படுத்துகிறாள். தலைவி குறத்தியை அழைத்து, தனக்குக் குறி பார்க்க வேண்டுகிறாள். குறத்தி, தலைவியின் கைரேகை பார்த்து பலன் கூறுகிறாள். பின் குறத்தி தலைவனிடம் ஒரு நட்சத்திரம், ஒரு ராசி, ஒரு பூ, ஒரு மலை சொல் என்று கேட்க, தலைவி, திருவோணம், மகரம், கடப்பம், விராலி என முருகனுக்கு உகந்தவற்றையே கூறுகிறாள். இவற்றை எண்ணிப்பார்த்த குறத்தி அவள் மயங்கத்திற்குக் காரணம் வேலவர் மீது கொண்ட காதலே எனத் தெளிவாகக் கூறுகிறாள்.*

*மோகினி தன் உயிர்த் தலைவனான வேலவனை அடைவது எப்போது என வினவுகிறார். குறத்தி நற்சகுனங்களை எடுத்துக்கூறி வேலவனின் வருகையை விவரிக்கிறாள். அப்பொழுது பாங்கி வேலவரின் கடப்பமாலையை வாங்கி வர, தலைவி அதை அன்புடன் பெற்று அகம் மகிழ்கிறாள். குறிதனைக் கண்டுரைத்த குறவஞ்சிப் பெண்ணுக்குப் பலபரிசு களை அளித்து அனுப்புகிறாள். குறத்தியின் கணவன் சிங்கனுடன் குறத்தி மகிழ்வுடன் கூடி இன்புறுகிறாள். இறுதியில் வாழியும் மங்களமும் சோபனமும் முறையாகப் பாடப் பெற்று நூல் நிறைவடைகிறது.*

*தமிழ் முருகன் இலக்கியங்கள் ஒருங்கே தொகுக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டால் அரிதான பல இலக்கிய நூல்கள் பெறமுடியும். இக்கட்டுரையின் வாயிலாக செந்தில் குறவஞ்சியும், விராலிமலை வேலவர் குறவஞ்சியும் முழுமையாக கிடைத்தாலும் அரியவகை நூலாகவே கருதவேண்டியுள்ளது என்பது தெளிவு.*

**துணை நூற்பட்டியல்**

1. *களவி. பா. 25.*
2. *குறுந். பா. 23.*
3. *கந்தரலங்கார. பா. 20.*
4. *சிலப்பதி. பா. 8*

5. திருமுருகு. பா. 45
6. சிலம்பு.
7. புறம். 56, 18
8. அகம். 266
9. திருமுருகு.125
10. குற்றாலக்குறவஞ்சி
11. குற்றாலக்குறவஞ்சி

**References**

1. Kalavi. Pa. 25.
2. Short Pa. 23.
3. Gandharalankara. Pa. 20.
4. Silapatti. Pa. 8
5. Thirumurugu. Pa. 45
6. Chimpanzee.
7. Outside. 56, 18
8. Internal. 266
9. Thirumuru.125
10. Courtalakuravanchi
11. Courtalakuravanchi